தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், எந்தக் கால்நடைகளுக்கும் இப்போது கோமாரி நோய் வருவதே இல்லை. முற்றிலுமாகத் தடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி அவர்களுடைய பகுதியிலே அந்த நோய் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோல, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணை பெற்று, இந்த நிதியாண்டில் அங்கே ஒரு மருந்தகம் அமைப்பது பற்றி அரசின் நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. அறிவிப்புகள்

(அ) குற்ற வழக்கு விசாரணை முறைத் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) தொகுப்புச் சட்டமுன்வடிவு, 2002, பேரவையின் மறுபரிசீலனைக்காக ஆளுநரால் திருப்பியனுப்பப் பெறுதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

31–10–2002 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட, 2002 ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணை முறைத் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) தொகுப்புச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2002) குறித்து, ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"MESSAGE FROM THE GOVERNOR

The Code of Criminal Procedure (Tamil Nadu Second Amendment) Bill, 2002 was passed by the State Legislative Assembly and was reserved by me under Article 200 of the

Constitution read with Clause (2) of Artcle 254 of the Constitution for the consideration of the President. The President has, in pursuance of the proviso to Article 201 of the Constitution, directed that the Bill be returned to the State Legislative Assembly to reconsider it and suitably amend section 167(2) of the Code of Criminal Procedure, 1973, including the proviso thereto, in its application to the State of Tamil Nadu, to provide for detention of an accused in custody for a further period of fifteen days, if the investigation of the case is transferred to any investigating agency, other than original investigating agency.

In accordance with the above direction, I, P.S. Ramamohan Rao, Governor of Tamil Nadu, hereby return the Code of Criminal Procedure (Tamil Nadu Second Amendment) Bill, 2002 to the State Legislative Assembly for reconsideration as per the directive of the President."

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாற்றுத் தலைவர்கள் பட்டியல். பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களைப் பேரவையின் ஏழாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

திரு. சி. சிவசாமி

திரு. வி. ஜெயராமன்

திருமதி சி.எம். சூரியகலா

திரு. லா. சந்தானம்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. செ.கு. தமிழரசன்